**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 38/2017**
திரு. உதயகுமார் (D.W.–4) **15.4.2025**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 22ம் பத்தியில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பொறுத்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தவறாக சாட்சியம் அளிக்கிறேன். அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. Princesses dyeing unit, Rajeshwari Bleaching company சேர்ந்து 2 கோடி வைப்பீடு செய்யவில்லை எங்களுடைய பொது சுத்திகரிப்பு நிறுவனத்தில் ரூ.38,37,062/– ரூபாய் தான் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. Princesses dyeing unit க்கு 8ம் பிரதிவாதி அனுமதித்த 220 KLD அதற்கான மாதந்திர தொகை ரூ. 1,21,000/– ஏப்ரல் 2012 ல் இருந்து செலுத்ததவறியதால் உரிமை ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. வாரிசுதாரர்களிடைய சொத்து பிரச்சனை என்பதால் தேவையில்லாமல் 8ம் பிரதிவாதியை சேர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 8ம்பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>1 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. என்னுடைய பிறந்த தேதி என்ன என்றால் 24.4.1993 ம் தேதி. என்அப்பா எப்போது இறந்துபோனார் என்றால் 9.11.2012 ம் தேதி இறந்துபோனார். தாவா சொத்திற்குரிய ஆவணங்களை பார்த்துள்ளீர்களா என்றால் தற்சமயம் பார்த்தேன். என்ன ஆவணங்கள் பார்த்தீர்கள் என்றால் செட்டில்மெண்ட் ஆவணம் தயாநீதி பெயரில் ஏற்பட்டதை பார்த்தேன். 5ம் பிரதிவாதி சுமதியின் கணவரின் அண்ணன் எனக்கு என்ன உறவு என்றால் என்னுடைய அம்மாவின் அப்பா. என்னுடைய தாத்தா என் அம்மாவிற்கு வீரபாண்டி கிராமத்தில் 1 1/4 ஏக்கர் சொத்து எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரி. அந்த சொத்தில் வீடுகள் கட்டி

என் அப்பா காலத்தில் இருந்து வாடகை பெற்றுவருகிறோம் என்றால் ஆமாம். என் அப்பாவுக்கு workshop உள்ளதா என்றால் இல்லை.

2. என் அப்பா பனியன் தொழில் செய்து வந்தார் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் உள்ளது. LIC ல் உள்ளது. தாத்தவிற்கு கீழ் அப்பா வேலை பார்த்துவந்தார். M/s. Prince dyeing என்ற ஒரு நிறுவனமே இல்லை என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.15 18:28:35 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.